இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - 2006
இறுதிப் பரீட்சை 2006 - மட்டம் 06
LWU 3324/4324 – வர்த்தக சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 24.04.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30

5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. IDAMA கம்பனியுடைய இயக்குனர் ஒருவரான ரொஷான், ஜன-ரெகும காப்புறுதி கம்பனியுடன் ஆயுட்காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டான். அவன் காப்புறுதி கொள்கைக்கான பிரேரணை படிவத்தை பூர்த்தி செய்த போது கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளித்தான்.

(1) ஏற்கனவே வேறு ஏதேனும் காப்புறுதி கம்பனியில் ஏதேனும் பிரேரணைகள் செய்திருந்தால் அவற்றினுடைய விபரங்களை குறிப்பிடவும். அவ்வாறு எனின் அவை சாதாரண தொகையுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டனவா?

விடை - எதுவும் இல்லை.

(2) கடந்த 5 வருட காலப்பகுதியில் பிரேரணையாளர் எவரேனும் வைத்தியரை நாடியிருந்தால் அதனுடைய விபரங்கள்.

விடை - எதுவும் இல்லை.

(3) பிரேரணையாளர் எதேனும் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டிருப்பின் அதனுடைய விபரம்.

விடை - எதுவும் இல்லை.

பிரேரணை படிவத்தில் ரொஷான் கையொப்பமிட்டான். இந்த வினாக்களுக்கு மேலதிகமாக, சாதாரணமாக இவ்வாறான கொள்கை ஒன்றில் காணப்படும் பொது தவிர்ப்புகள் உள்ளடங்கிய நிலையான படிவங்கள் மற்றும் நிபந்தனைகளும் காணப்பட்டன.

எவ்வாறாயினும், ஏற்கனவே மூன்று காப்புறுதி கம்பனிகள் ரொஷானுடைய ஆயுட் காப்புறுதி கொள்கைகளை நிராகரித்திருந்தன என்பதை ஜன-ரெகும கண்டு பிடித்தது. மேலும் இரண்டு வருடங்களுக்கு முன்பு பல்கலைக்கழக மாணவனாக இருந்த போது ரொஷான் பல்கலைக்கழக வைத்தியரிடம் இருந்து வைரஸ் காச்சலுக்கு மாத்திரைகள் பெற்று இருந்தான் என்பதையும் ஜன-ரெகும கம்பனி அறிந்து கொண்டது. இதற்கு மேலாக,பதவிய கிராமத்தில் இருந்த தொலைதொடர்பகத்தில் வேலை செய்யும் ஊழியர்களுள் ஒருவரை அச்சுறுத்தினார் என்ற குற்றத்திற்கு குற்றவாளியாக்க பட்டிருந்தான் என்பதையும் ஜன-ரெகும கம்பனி அறிந்து கொண்டது.

ஜன-ரெகும காப்புறுதி கம்பனி உமது ஆலோசனையை நாடுகிறது. கம்பனிக்கு ஆலோசனை வழங்குக.

2. "தவணைக் கொள்வனவு உடன்படிக்கை ஒன்று பொருட்கள் விற்பனைக்கான ஒப்பந்தம் ஒன்றில் இருந்து குறிப்பிடத்தக்களவில் வேறுபடுகிறது".

நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு விசேட அவதானம் கொடுத்து இக் கூற்றின் வலிதான தன்மையை சுருக்கமாக பரீட்சிக்க.

3. இரண்டில் ஏதேனும் ஒன்று

உம்மா, ஒரு குடும்பத்தலைவி ஆவாள். அவள் ஒரு சிறிய கோழிப்பண்ணையை நடாத்துவதன் மூலம் தனது குடும்பச் செலவுகளுக்காக தனது வீட்டுக்கருகில் இருக்கும் சிறிய கடை ஒன்றுக்கு முட்டைகளை விற்று வருகிறாள். வார இறுதி பத்திரிகைகளில் காணப்பட்ட ஒரு விளம்பரத்தை படித்த உம்மா சில கோழி தீன்களை வாங்குவதற்காக வரையறுக்கப்பட்ட புங்கா Ltd ற்கு தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டாள். துரதிஷ்டவசமாக அவள் வாங்கிய கோழி தீன்களில் சில நோய் காவிகள் பிடித்திருந்ததால் அவளுடைய கோழிகள் யாவும் இறந்தன.

(அ) உம்மாவுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) உம்மா ஒரு ஆவணத்தில் கையொப்பமிட்டிருந்து அவ் ஆவணத்தில், விநியோகிக்கப்பட்ட உற்பத்திபொருட்களில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அதற்கு புங்கா Ltd பொறுப்பல்ல என குறிப்பிட்டு இருந்தால் உமது விடை வேறுபடுமா?

அல்லது

'நம்பிக்கையுடன் எவ்வாறு பரீட்சைக்கு முகம்கொடுத்தல்' என்ற புத்தகத்தின் எழுத்தாளரான உம்மா வரையறுக்கப்பட்ட புங்கா பிரசுரிப்பாளர் Ltd க்கு தரகு அடிப்படையிலான விற்பனை அல்லது, மீள் அளித்தல்(return basis) அடிப்படையில் விற்பனை செய்யும் பொருட்டு 300 புத்தக பிரதிகளை விநியோகித்தாள். எவ்வாறாயினும் புங்கா பிரசுரிப்பாளர் Ltd இன் குறுங்கால கடன் ஒன்றுக்கு தன்னால் அனுப்பப்பட்ட புத்தகச் சேர்க்கை உட்பட புங்கா Ltd இல் உள்ள அனைத்து புத்தகங்களும் பிணையாக வைக்கப்பட்டுள்ளன என்பதை உம்மா அறிந்து கொண்டாள்.

(அ) உம்மாவுக்கு ஆலோசனை வழங்குக.

(ஆ) புங்கா பிரசுரிப்பாளர் Ltd உம்மாவினால் அனுப்பப்பட்ட புத்தகங்களை கடனுக்கு பிணையாக வைக்காது ஆயின் மீள் அளிப்பதற்குரிய காலவரையறுக்கு அப்பால் அப்புத்தகங்களை தமது களஞ்சிய சாலையில் வைத்திருப்பின் உமது விடை வேறு படுமா?

4. பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகளையும் தீர்க்கப்பட்ட வழக்குகளையும் கொண்டு பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டினை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(அ) ஒரு மாற்று உண்டியலும் காசோலையும்

(ஆ) பயணத்தில் வைத்திருப்பவரும் பெறுமதியில் வைத்திருப்பவரும்

(இ) காசோலையும் வாக்குறுதி பத்திரமும்

5. "..பொருட்களுக்கு சொந்தக்காரர் அல்லாத ஒரு நபர் அப்பொருட்களுடைய சொந்தக்காரரின் அதிகாரத்தின் கீழ் அல்லது சொந்தக்காரருடைய சம்மதமின்றி பெருட்களை விற்றிருப்பின் வாங்குணர் பொருட்களை விற்பனை செய்தவரின் உரித்தை விட பொருட்களுக்கு நல் உரித்தை கொண்டிருக்க மாட்டார்..."

கருத்துரை செய்க.

6. பின்வரும் சூழ்நிலைகளில் காணப்படுகின்ற சட்ட நிலைமையை சுருக்கமாக ஆராய்க.

(அ) பெரேரா டிலானிடம் இருந்து ரூ 25,000/= ஐ கடனாக பெற்றிருந்தார். கொடுப்பனவு செலுத்த இருந்த போது இக்கடனை செலுத்த டிலான் சார்பாக ரூ 25,000/= க்கு காசோலை ஒன்றை வரையுமாறு சில்வாவிடம் கூறினான். இக்காசோலையை பணமாக்க முன்னர் சில்வா கொடுப்பனவை இரத்துச்செய்யுமாறு உத்தரவிட்டான்.

(ஆ) கமால் சார்பாக காசோலை ஒன்று வரையப்பட்டது. எவ்வாறாயினும் கமல் வெறுங் காசோலையில் புற குறிப்பிட்ட பின்பு காசோலை திருடப்பட்டது. அதனை அடுத்து காசோலையை வைத்திருந்தவருக்கு பணம் செலுத்தப்பட்டது.

(இ) குணதாச வெறும் காசோலை ஒன்றில் "கைமாற்றத்தகாதது" என குறுக்கு கோடிட்ட காசோலையொன்றை வரைந்து வெற்றிடத்திலே கொடுப்பணவாளரின் பெயரையும் தொகையையும் பூர்த்தி செய்யுமாறு கூறி அக்காசோலையை லிகிதரிடம் வழங்கினான். எவ்வாறாயினும் லிகிதர் குணதாசாவால் அதிகாரம் அளிக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமான தொகையொன்றை உட்புகுத்தி தான் பெற்ற கடனுக்கு கொடுப்பனவாக அக்காசோலையை சுசிலுக்கு வழங்கினான்.

7. பின் வருவனவற்றில் ஏதேனும் <u>இரண்டினுடைய</u> தாற்பரியத்தை தீர்க்கப்பட்ட வழக்குகள் நியதிச்சட்ட ஏற்பாடுகள் என்பவற்றோடு சுருக்கமாக விளக்குக.

(அ) கடன் பற்றுரிமை மாற்றியீடு(Subrogation)

(ஆ) பொருட்கள் விற்பனை ஒப்பந்தம் ஒன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள நியாயமற்ற ஒப்பந்த வாசகம்

(இ) உண்டியல் ஒன்றின் புறக்குறிப்பு

(ஈ) பொருட்கள் விற்பனை ஒப்பந்தம் ஒன்றின் கீழ் ஒப்பந்த முறிவு ஒன்றிற்கு இருக்கின்ற பரிகாரங்கள்.

8. பின்வருவனவற்றில் <u>இரண்டு</u> பற்றி குறிப்பு எழுதுக.

(அ) இல. 9, 2003ஆம் ஆண்டின் நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டம்

(ஆ) இல. 25, 1980ஆம் ஆண்டின் உணவுச் சட்டம்

(இ) பொருட்களின் விநியோகம்

(ஈ) உண்டியல் ஒன்றின் விடுவிப்பு

(பதிப்புரிமைபெற்றது)